பேரூராட்சிகளுக்கு நிதி உதவி.

*397 திரு. எம். அண்ணாமலை :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போதுமான வருமானமற்ற பேரூராட்சிகளுக்கு டிச், கழிப்பிடம் போன்ற சுகாதாரப் பணிகளுக்கு இலவச நிதி உதவி புரியும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் பொதுவாகவே சுகாதாரக் கேடு நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வந்துள்ளது. இதில் பிரதானம் டிச்-கள், கழிப்பிடங்கள் போன்றவை போதுமானவையாக இல்லாதது என்பதாகப் பிரதான காரணமாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பொறுப்பை அந்தப் பேரூராட்சி நிர்வாகத்தினிடத்தில் ஒப்படைக்காமல் — அதாவது அதனுடைய நடைமுறை வேலை அதனுடைய பொறுப்பு என்றாலும், இது மக்களுடைய அடிப்படைப் பிரச்சினை, என்பதால் அதற்கான நிதியும், பொறுப்பும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதையும், மேலும், இன்றைய நகரத்தினுடைய வளர்ச்சிக்கேற்ப அந்தப் பணியாளர்களை நியமிக்க அரசு முயற்சிக்குமா என்பதை இங்கே நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுவாகப் பேரூராட்சிகள் அனைத்திலும் தற்போது அந்த கழிவறைகள் வறண்ட—கிடப்பதை, அதை எடுத்துத் தலையில் சுமந்து துப்புரவுத் தொழிலாளர்கள் போகிற நிலையை நிச்சயமாகத் தவிர்க்க வேண்டும் என்ற முறையை அரசாங்கம் கையாண்டு, படிப்படியாக அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. குறிப்பாக அதை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மைய ஊரகத் துப்புரவுத் திட்டம்; குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்; மனித உரிமைப் பாதுகாப்புத் திட்டம், குறைந்த செலவினக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் என்ற முறையில் இவைகளை ஏற்படுத்திக் கொண்டு, மைய அரசு 50 சதமும், மாநில அரசு 50 சதவீதமும் இந்த 1989–90 ஆம் ஆண்டில் ஆறு பேரூராட்சிகளில் 97 இலட்சத்து 58 ஆயிரம் மதிப்பீட்டில் 5,979 எண்ணிக்கை கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. படிப்படியாக இந்தத் திட்டத்தை இந்த ஆண்டும் மேற்

1990 மே 10]

கொள்ளப்பட இருக்கிறது. இதைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய எண்ணத்தை ஈடேற்றலாம் என்று நான் கருதுகிறேன்.

9–35 மணி

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர், ஊத்தங்கரை ஆகிய இரண்டு பேரூராட்சிகளும் எனனுடைய தொகுதியில் வருகின்றன. அந்தப் பகுதிகள் மிகுந்த வறுமைக்கு உட்பட்ட மக்களைக் கொண்ட பகுதிகளாகும். ஆகவே, அரசு மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை அந்தப் பகுதியில் முதல் நடவடிக்கையாக அமலுக்குக் கொண்டு வந்து இந்தக் குறையைத் தீர்க்க முயற்சிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, அடுத்த முறை தேர்வு செய்கிறபோது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தையல் ஆசிரியைகள்.

* 3086 திரு. என். பழனிவேல்
திரு. வி. இராமசாமி:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தையல் ஆசிரியைகளை அரசு உழியர்களாக ஏற்று மற்ற ஊழியர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தையல் ஆசிரியைகளை அரசு ஊழியர்களாக ஆக்கும் திட்டம் எதுவும் இல்லை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் தற்பொது சுமார் ஆயிரம் அல்லது 1,200 பேர்கள் தையல் ஆசியர்களாகப் பணிபுரிவதாகத் தெரிகிறது. இவர்களை அரசு ஊழியர்களாக ஏற்று, அவர்களுக்கு பதவி உயர்வு மற்ற சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று நீண்டகாலமாக, 10 ஆண்டுகளுக்கு மேலாக கோரிக்கை வைத்து ஒவ்வொரு அரசையும் கேட்டு வருகிறார்கள். அவர்கள் எல்லாம் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், 10,15 ஆண்டுகள் பணிபுரிந்தவர்கள் ஆகவே, இவைகளை ஏற்று அவர்களை அரசு ஊழியர்களாக நியமிப்பதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.